Judicial Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
திருவெண்ணெய்நல்லூர்.

CC. No. 124 / 2024

2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 3** -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.V.செல்வகோபால், Grade-III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | திருமதி. ஜெயா | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| க/பெ. | - | மருதையன் | வயது | | 71 |
| கிராமம் | - | அரசங்குப்பம் | | | |

31. 01. 2025

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. ஏற்கனவே நீதிமன்றத்தில் விசாரணையில் சொன்னதைத்தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி எங்கள் பெயரில் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அது இந்நீதிமன்றத்தில் சிசி.நெ.3/2023 என நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் போலீஸ்டேசனில். என்றைக்கு விசாரித்தார்கள் என்றால் 13 வது வருடம் சாய்ந்தரம் 04. 00 மணியில் இருந்து 05.00 மணிக்குள். சாட்சி மறுபடியும் முண்டியம்பாக்கத்தில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வந்த பிறகுதான் விசாரித்தார்கள்.

2. போலீசார் விசாரணையில் தண்ணீர் பாய்ச்சும்போதுதான் பிரச்சனையாச்சி என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். போலீசார் விசாரணையில் ஆபாசமான வார்த்தைகளை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அது சொல்லக்கூடிய வார்த்தையாகவே இல்லை. போலீசார் விசாரணையில் இரும்பு பைப்பால் அடித்ததாக சொல்லியுள்ளேனா என்றால் நினைவில் இல்லை. கட்டையை எடுத்து வந்து முதலில் அடித்தது என்னைத்தான். 4 பேருமே அடித்தார்கள். இந்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சாட்சி தனது இடது தோள்பட்டையை காட்டி 11 வருடத்திற்கு முன்பு அடித்தது தற்போதும் தனக்கு வலிக்கிறது என்று சொல்கிறார்.

3. நான் அடிப்பட்டவுடன் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு யார் யார் எந்த ஆயுததினால் தாக்கியதாக குறிப்பிட்டு சொன்னேனா என்றால் என்னையும் எனது மகனையும், எனது கணவரையும் பார்த்துவிட்டு காயம் அதிகமாக இருப்பதால் மேல்சிகிச்சைக்காக போகவேண்டும் என்று அனுப்பிவிட்டார்கள். எத்தனை பேர் அடித்தார்கள் என்று சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். போலீசார் விசாரணையில் ராமநாதன் அடித்ததில் எனது கணவருக்கு 2 பல் உடைந்து விட்டது என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

4. திருக்கோவிலூர் மருத்துவமனையில் இருந்து மேல் சிகிசைக்காக அன்றைக்கே அனுப்பினார்கள். முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் நான் 3 நாளும் எனது மகனும் எனது கணவரும் 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தார்கள். போலீசார் விசாரணையில் தினகரன் இன்ஸ்பெட்டருக்கு போன் செய்த விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவர் நாயனூரில் இருந்து வழி தெரியாது என்று சொன்னார் எனது சின்னவன் போய் கூப்பிட்டு வருவதற்குள் அடித்து முடித்துவிட்டார்கள்.

5. இளங்கோவனை ஆய்வாளர் கூட்டி சென்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் ஆய்வாளர்தான் என்னை கூப்பிட்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்த்தார். 2010 ல் எதிரி எங்கள் மீது கொடுத்த புகாரில் குற்ற எண்.570/2010 சிசி.நெ.193/2024 என்ற வழக்கு இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் எதிரியை நாங்கள் வழி மறித்து அடித்துவிட்டு எனது மகனும், எனது கணவரும் ஓடும்போது கீழே விழுந்து கை ஒடிந்துவிட்டது என்றால் இவர் என்னை அடித்தபோது கோழிப்பண்ணையில் இருந்து வந்தபோது என்னை 4 பேரும் பல்லை கடித்துக்கொண்டு

வீட்டில் இருந்து எடுத்து வந்த தடியால் முதல் அடி என்னைத்தான் அடித்தார்கள். இந்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எனது அலறல் சத்தம் கேட்டபிறகுதான் எனது மகன் வந்தான். அவனையும் அடித்துவிட்டார்கள். ஏற்கனவே எங்களுக்குள் நில பிரச்சனை உள்ளது என்றால் நில பிரச்சனை எதுவும் இல்லை. பாட்டை பிரச்சனை உள்ளது என்றால் அரசாங்கத்திற்கு சொந்தமான பாட்டை.

5. அந்த முன் விரோதத்தை வைத்துதான் எனது பையனை அடித்து செத்துவிட்டார் என்று வேலியின் மீது தூக்கி போட்டுவிட்டு போய்விட்டார்கள். போய்விட்டு எங்கள் மீது போலீசில் புகார் கொடுத்துவிட்டார்கள்.

மறு விசாரணை - இல்லை.